முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1212

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.01.2023, திங்கள்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சும் வள்ளலே
வையகத்தை காக்கும் கலியுகத்தின் அண்ணலே
2. அண்ணலே ஆறுமுக அரங்கனே
அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
மண்ணுலகில் உன்சக்தி பெருக இனிதே
மார்க்கமுடன் ஞானஅறிவுரை ஆசிதன்னை
3. ஆசிதனை சுபகிருது கலைதிங்களில்
(சுபகிருது வருடம் தை மாதம் 09ம் நாள் 23.01.2023, திங்கள்கிழமை)
அரங்கன் இன்னும் ஆற்றல்பெருக எடுத்துரைப்பேன்
வாசிவென்ற ஞானியர் துணையோடு
வல்லமைபட இந்த கலியுகத்தில் தர்மம் வளர்த்து
4. வளர்த்துமே அரங்கன் நீ வல்லமையான தொண்டர்களை படைத்து
படைத்துமே உலகமாற்றத்தை பழுதின்றி உன்அவதார நோக்கமாக
தடையற பூர்த்திக்கொள்ள ஆசியுண்டு தவராஜன் உந்தனுக்கு
ஆறுமுகன்யான் சித்தி தந்து நித்தம்நித்தம் ஆற்றல்தனை சூட்சுமமாக வழங்கி வருதல் காண
5. காணவே அரங்கன் உன் தொடர்பு கொண்ட
கலியுக மக்களுக்கெல்லாம்
ஞானபலம் உறுதியாகி இனி பிறவாப்பேறு
ஞானிகள்ஆகும் சக்தியாக மாற்றமும் கூடும்
6. கூடவே ஆசிதந்தேன் ஆறுமுகன் யான்
குருஅரங்கன் தயவாலே இந்த உலகம்
ஈடேற்றம் காண்பது உறுதி உறுதி
இயம்பிய ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–